# ஆனையிறவு முகாமைச் சூழ இராணுவம் தொடர்ந்தும் மூர்க்கமான ஷெல் தாக்குதல்

பரந்தன் நோக்கி முன்னேற படையினர் நேற்று முன்தினம் எடுத்த முயற்சி விடுதலைப்புலிகளால் முறியடிக்கப்பட்டதையடுத்து படையினர் தற்போது கடும் ஷெல் தாக்குதலை நடாத்தி வருகின்றனர். ஆனையிறவு முகாமின் சுற்றாடல் பகுதிகளில் முகாமிலிருந்து மூர்க்கத்தனமாகப் படையினர் ஷெல் தாக்குதலை நடாத்தினர். குறிஞ்சாத்தீவு உமையாள்புரம், இயக்கச்சி, முகமாலை, பரந்தன் பகுதிகளில்தொடர்ச்சியாக ஷெல்கள் வீழ்ந்து வெடித்தன இரவு நேரங்களிலேயே படையினரின் ஷெல் தாக்குதல்கள் அதிகரிப்பதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. இதேவேளை ஆனையிறவு பகுதியிலுள்ள படையினரின் காவலரண்கள் மீது விடுதலைப்புலிகள் இடையிடையே தாக்குதல் நடாத்தி வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது முகாம் சூழலில் தற்போது தினமும் படையினருக்கும் - புலிகளுக்கு மிடையில் மோதல்கள் நடைபெறுவதாக பாதுகாப்பு அமைச்சும் ஒப்புக்கொண்டது.


பக்கங்கள் நான்கு — விலை ரூபா:- 5 00

# முரசொலி

முரசு 05 ஒலி 257 பிரசோற்பத்தி ஆடி 27 (12.08.1991) திங்கள்


# சீனாவின் புதியஎப்-85 யுத்தவிமானங்கள் அடுத்த வாரம் கொழும்பு வருகின்றன!

சீனாவிடமிருந்து புதிதாக கொள்வனவு செய்யப்பட்ட யுத்தவிமானங்கள் கொழும்பு வந்து சேரவுள்ளதாக கொழும்புப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. சீன எப் - 85 ரக யுத்தவிமானங்கள் ஆறு வாங்கப்பட்டதாகவும் இவற்றில் மூன்று அடுத்த வாரம் கொழும்பு வந்து சேரும் எனவும் மற்றைய மூன்று விமானங்களும் அடுத்த மாத ஆரம்பத்தில் வந்துசேரும் எனவும் பலாலியில் உள்ள இராணுவ அதிகாரியொருவரை மேற்கோள் காட்டி இப்பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது. இதே சமயம் ஸ்ரீலங்கா விமானப்படையினருக்கு எதிராக விடுதலைப் புலிகள விமான எதிர்ப்புப் பீரங்கிகளை பெல்ஜியத்திலிருந்து பெற்றுள்ளதாகவும் அப்பத்திரிகைச் செய்தி வெளியிட்டுள்ளது.

# இலங்கை விவகாரங்களில் யாருமே தலையிட முடியாது!

## ஜனாதிபதி பிரேமதாஸ எச்சரிக்கை

"இலங்கையின் உள்விவகாரங்களில் எவரும் அநாவசியமற்ற முறையில் தலையிடுவது அனுமதிக்க முடியாதது இந்நடைமுறை தனிநபர்களாயினும், பிறநாடுகளாயினும் பொருந்தும்" இவ்வாறு ஜனாதிபதி பிரேமதாஸ எச்சரிக்கை விடுத்துள்ளார்.

நேற்றுக் கொழும்பில் நடைபெற்ற முஸ்லிம் காங்கிரஸின் 10 ஆவது தேசிய மாநாட்டில் கலந்துகொண்ட ஜனாதிபதி பிரேமதாஸ மேற் கண்டவாறு கூறினார்.

"சர்வதேச மரபுகளைப் பேணுவதாகக் கூறி உள்விவகாரங்களில் தலையிடுவதை ஏற்றுக்கொள்ள முடியாது."

"மனித உரிமைகள் தொடர்பாக சர்ச்சை எழுப்பிய பிரிட்டிஷ் தூதுவர் டேவிற் கிளாஸ்ரோன் நாட்டைவிட்டு வெளியேற்றப்பட்டமையை இதற்கு நல்ல உதாரணமாக எடுத்துக்கொள்ளலாம்" எனவும் ஜனாதிபதி மேலும் தெரிவித்தார்

முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனா குறித்து கருத்து வெளியிட்ட ஜனாதிபதி பிரேமதாஸ, "வடக்குக் கிழக்குப் பகுதியில் நிலவும்


— 04ஆம் பக்கம் பார்க்க


## உளவு விமானம் கண்காணிப்பு!

சாவகச்சேரிப் பகுதியில் தீவிரமான முறையில் இராணுவத்தினருக்கு எதிரான நடவடிக்கைகள் முடுக்கிவிடப் பட்டுள்ளதாகப் பாதுகாப்பு அமைச்சு நேற்றுத் தெரிவித்தது.

விமானப்படையின் உளவு விமானம் இப்பகுதியில் நட


— 04ஆம் பக்கம் பார்க்க


## 3 இந்திய கடற்படைப்பிரிவுகள் தஞ்சாவூரில் ஆரம்பம்

தமிழ் நாட்டினுள் இலங்கைத் தீவிரவாதிகள் நுழைவதைத் தடுக்கத் தஞ்சாவூரில் நேற்றுப் புதிய கடற்படைப் பிரிவுகள் இயங்க ஆரம்பித்தன.

வேதாரணியம், கோடிக்கரை ஆகிய பகுதிகளில் நேற்று முதல் மூன்று கடற்படைப் பிரிவுகள் ஆரம்பிக்கப்பட்டதாகச் சென்னைச் செய்திகள் தெரிவிக்கின்றன.


— 04 ஆம் பக்கம் பார்க்க


## ஊரடங்கு நீக்கம்

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் சில பகுதிகளில் மட்டும் நேற்றுமுதல் ஊரடங்குச் சட்டம்நீக்கப்பட்டுள்ளது யாழ் நகரம், கிளிநொச்சி


— 04 ஆம் பக்கம் பார்க்க


## தமிழக அதிரடிப்படைக்கு ஹரியானாவில் பயிற்சி!

தமிழகத்தில் அமைக்கப்படவுள்ள விசேட பொலிஸ் அதிரடிப்படைக்கு ஹரியானா மாநிலத்தில் பயிற்சியளிக்கப் படவுள்ளது.

ஹரியானாவில் உள்ள புதுடில்லி தேசியப் பாதுகாப்புக் கழகம் இப்பயிற்சியைவழங்குமெனவும் புதியரக ஆயுதங்


— 04ஆம் பக்கம் பார்க்க


## சிநோரை மூடிவிடுவதென அரசாங்கம் முடிவு?

யாழ்ப்பாணத்தில் இயங்கிய சிநோர் ஸ்தாபனத்தை 1984 இல் பொறுப்பேற்ற அரசு இப்பொழுது அதை முற்று முழுதாக மூடிவிடுவதற்குத் தீர்மானித்துள்ளது.

கொழும்பில் நடைபெற்ற கருத்தரங்கில் இது குறித்து கருத்துத்தெரிவித்த சிநோர்


— 04ஆம் பக்கம் பார்க்க


## வேலைக்கு ஆள்திரட்டும் அரேபிய தொழிலதிபர்கள் பிணை செலுத்தவேண்டும்

மத்திய கிழக்கு வேலைவாய்ப்புக்கென இலங்கையரைத் திரட்ட வரும் மத்திய கிழக்கு அரேபியர்கள் இலங்கை அரசுக்கு பிணைசெலுத்த வேண்டும் என தொழிலமைச்சு தெரிவித்துள்ளது.

இவ்வாறு வேலைவாய்ப்புக்கென ஆட்களைத் திரட்ட வரும் அரேபிய தொழில் வழங்குநர்கள் தத்தம் நாடுகளிலுள்ள இலங்கைத் தூதரகங்களில் 15 லட்சம் அமெ


— 04 ஆம் பக்கம் பார்க்க


## ★ ஆனையிறவு பலவேகய யுத்தத்தின் பின் முப்படைகளை உற்சாகப்படுத்த கொப்பேகடுவ பெரு முயற்சி!

ஸ்ரீலங்கா முப்படையினரையும் உற்சாகப்படுத்தும் முயற்சியில் தற்போது இராணுவ அதிகாரி மேஜர் ஜெனரல் டென்சில் கொப்பேகடுவ இறங்கியுள்ளார் எனத்தெரியவருகிறது.

ஆனையிறவில் நடைபெற்ற போரில் படையினருக்கு ஏற்பட்ட பலத்த இழப்பினால் சோர்வடைந்துள்ள படையினரை ஊக்குவிக்குமுகமாக கொப்பேகடுவ அறிக்கைகளை விடுத்து வருகிறார்.

இவரின் இவ்வறிவிப்பை இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம், ரூபவாஹினி என்


— 04ஆம் பக்கம் பார்க்க


## பிரசவ மருந்து இல்லை

அம்பன் அரசினர் வைத்திய சாலையில் பிரசவ காலங்களில் போடப்படும் ஊசி மருந்து முடிவடைந்துள்ளது.

இம் மருந்தை வெளியில் 80 ரூபா கொடுத்து வாங்க


— 04 ஆம் பக்கம் பார்க்க


## மீசாலையில் அஞ்சலி

ஆனையிறவில் விடுதலைப் புலிகளுக்கும் இராணுவத்தினருக்குமிடையில் ஏற்பட்ட நேரடி மோதலின்போது வீர மரணத்தைத் தழுவிக்


— 04 ஆம் பக்கம் பார்க்க

## அழுக்ககற்ற சாம்பல்!

### பாரதிபாடல் நடைமுறையில்

அசுத்தமான துணிகளைக் கழுவுவதற்கு உபயோகிக்கும் சவர்க்காரங்களின் விலை, ஆனை விலை, குதிரை விலையாய் றொக்கற் வேகத்தில் உயர்ந்து கொண்டே போவதினால் யாழ்மக்களின் கவனம் அடுப்புச் சாம்பல் பக்கம் தற்போது திரும்பியுள்ளது.

அடுப்புச் சாம்பலை எடுத்து, சிறு கண் உள்ள அரி தட்டினால் ஒருதரத்திற்கு இரண்டு தடவை பட்டுப் போல் நன்கு அரித்தெடுத்து ''ஓமோ'' கரைப்பது போல் தண்ணீரில் நன்றாகக் கரைத்து அதில் துணிகளைக்குறைந்தது ஒரு மணிநேரமாவதுஊறவைத்துப் பின் எடுத்துக்கசக்கிப்பிழிந்தால் அழுக்கு இருந்தஇடம் தெரியாமல் மறைந்து விடும் என்று அனுபவ ரீதியாக சாம்பலின் பயன் கண்டவர்கள் கூறுகிறார்கள்.

சாம்பலில் உள்ள காரத்தன்மை அழுக்கை அகற்ற உதவுகின்றது. 'துணி வெழுக்க மண்ணுண்டு தோல் வெளுக்க சாம்பலுண்டு' எனப்பாரதியார் பாடியுள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (16)

## உள்ளூர் உற்பத்திப் பொருளை வாங்கி

# எமது உற்பத்தியை ஊக்குவிப்போம்

உள்ளூர் உற்பத்திகளுக்கு வெறுமனே ஆதரவு மட்டும் அளித்தால்போதாது அதற்கு சகல உதவிகளையும் அளித்து அவற்றை ப்பாரிய அளவில் விற்பனை செய்ய பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் முன்வர வேண்டும் என்று புலோலி ப. நோ. கூ. சங்கத் தலைவர் பி மாணிக்கவாசகர் அண்மையில்வடமராட்சியில் சமுத்திராமச்ச உணவுப் பக்கற் வெளியீட்டு விழாவின் போது கூறினார்.

அவர் மேலும் பேசுகையில் சமுத்திரா மச்ச புரத உணவு தென்னிலங்கையில் இருந்து வரும் சோயா மீற் பக்கற் உணவை விட பன்மடங்கு புரதச் சத்தும் தரமும் உள்ளது. இப்பேர்ப்பட்ட எமது உள்ளூர் உற்பத்திப் பொருள்களுக்கு பணம் படைத்தவர்களும், பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களும் பல தரப்பிலும் பல உதவிகளைச் செய்து விரிவு படுத்த வேண்டும்.

முன்பு எமது உலர் உணவுப் பொருள்களான உழுந்து, பயறு போன்றவைகள் யப்பானுக்கு ஏற்றுமதி செய்தார்கள். அப்பேற்பட்ட சத்துள்ள உணவுகளைநம் மக்கள் ஏன் பயன் படுத்தக் கூடாது.

எமது பணத்தினை வெளியிடத்துக் கொம்பனி கொள்ளை லாபமடிக்கின்றன என்பது பலருக்கும் தெரியும். இத் தரமற்ற பொருள்களுக்கு எமது பணத்தினைக் கொடுத்து வாங்குவதை விட எமது தரமான உள்ளூர் உற்பத்திகளை வாங்கி மக்கள் உபயோகிக்க முன்வரவேண்டும் என்றார்.

மேற்படி வெளியீட்டு விழாவில் வடமராட்சி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர்கள் அனைவரும் பங்கு கொண்டதுடன் மேற்படி சமுத்திரா மச்ச புரதச் சத்து உணவினைத்தாம் பெருமளவில் கொள்முதல் செய்யவும் முன்வந்துள்ளனர் 09

## 3 மாதமாக தபாற்சேவை இல்லை வெளியுலக தொடர்பின்றி மக்கள்

முல்லைத்திவு மாவட்டத்தில் தபால் விநியோகம் கடந்த மூன்று மாதங்களாக மோசமடைந்திருப்பதால் அம் மாவட்ட மக்கள் வெளியுலகத் தொடர்பு எதுவும் அற்ற நிலையில் உள்ளனர்

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் உணவுப் பொருள்களைக் கொண்டு வரும் போது வவுனியாவில் உள்ள தபாற் பொதிகள் முல்லைத்தீவிற்கு கொண்டு வருவது வழக்கம். ஊரடங்கு நிலைமை காரணமாக இத்தபாற் பொதிகள் வவுனியாவில் தேங்கியுள்ளன.

அத்துடன் வெளிநாட்டிற்கு அனுப்பப்பட வேண்டியதபால்கள் கடந்த மூன்று மாதங்களாக முல்லைத்தீவில் தேங்கியுள்ளன. (24)

## அகதிகள் வருகையைக்குறைக்க சுவிஸ் அரசு நடவடிக்கை

வெளிநாட்டு அகதிகள் படையெடுப்பைக் கட்டுப்படுத்த புதிய நடவடிக்கைகளை எடுக்கப் போவதாக சுவிஸ் அரசு அறிவித்துள்ளது.

சுவிஸ்வந்து சேருபவர்களின் பெரும்பான்மை யானவர்கள் உண்மையான அரசியல் தஞ்சம் கோருபவர்களாக அன்றி வாழ்வை வளம்படுத்திக் கொள்ளும் நோக்கமுடைய வர்களாகவே காணப்படுகின்றார்கள்

இவ்வருட ஆரம்பத்திலிருந்து மே மாத நடுப்பகுதி வரை தஞ்சம் கோரி விண்ணப்பித்தவர்களின் எண்ணிக்கை 17500 ஆகும். கடந்த வருடம் இதே காலப்பகுதியில் விண்ணப்பித்தவர்களின் எண்ணிக்கையுடன் ஒப்பிடும் போது இது 85 சத விதத்தால் அதிகரித்துள்ளது எனப்பத்திரிகையாளர் மாநாட்டில் உரையாற்றிய சுவிஸ் நீதியமைச்சர் ஆர்னோல்ட் கொலர் கூறியுள்ளார். (11)

## சூறாவளியையும் எதிர்த்துச் செல்லும் சக்திமிக்க படகு

கப்பல்கள் அநேகமாக இயன்றளவு பசுபிக் சமுத்திரத்தை தவிர்த்தே தமது பயணத்தை மேற்கொள்வது வழக்கம் காரணம், அங்கு தான் அடிக்கடி சூறாவளிக் காற்று வீசுவது வழக்கம்.

மேற்கு ஜேர்மனியில் உள்ள ஃபீரீட்ரிச் வெயின் ஆராய்ச்சி நிறுவனம் வடிவமைத்து உருவாக்கியுள்ள பாய்மரப்படகு பசுபிக் சமுத்திரத்தில் மாத்திரமல்ல பேய்க்காற்று வீசும் எந்தப்பிரதேசத்திலும், வெப்பமண்டலப் பகுதிகளிலும் எவ்வித ஆபத்துமின்றிச் செல்லலாம் என இதனை உருவாக்கியவர்கள் கூறுகிறார்கள்.

இப்படகின் இன்னொரு விசேடம் காற்று இல்லாத சமயங்களிலும இயங்கக் கூடியதாய் 'டீசல் என்ஜினும் இதில் பொருத்தப்பட்டுள்ளது. மேலும் வேகத்திற்காகவும் இதில் நவீன சாதனங்கள் பொருத்தப்பட்டுள்ளன.

65 மீற்றர் நீளமுள்ள இப்படகின் வடிவமைப்பு 19 வது நூற்றாண்டின் முற்பகுதியில் கட்டப்பட்ட படகுகளின் பாணியை ஒத்திருந்தாலும் ஆயிரம் தொன்கள் வரை பொருள்களை இதில் ஏற்றலாம் என்று தெரிவிக்கப்படுகிறது. (16)

## பரீட்சைகள் ஒத்திவைப்பு

யாழ் பல்கலைக்கழக மருத்துவ, மற்றும் கலைப்பீட மாணவர்களுக்கு நடைபெறவிருந்த பரீட்சைகள் பிற்போடப் பட்டுள்ளதாக யாழ் பல்கலைக்கழக வட்டாரங்கள் தெரிவித்தன. (06)

## பனங்களியால் உடை தோய்த்தல்

தென்மராட்சியின் பல பகுதிகளில் பனம்களியை உடுப்புகள் சுத்தம் செய்வதற்கு பயன்படுத்துகின்றனர். இதன் மூலம் சவர்காரத்தை போன்றே மிக எளிமையாக உடுப்புக்களை சுத்தம் செய்ய முடியும் என பாவனையாளர் குறிப்பிடுகின்றனர். (ப29)

## நவாலியில் ஒரு பகுதியினர்க்கு தொழுநோய் ஆய்வு

நவாலியில் நேற்று முன்தினம் மக்களின் ஒரு தொகுதியினருக்கு தொழுநோய் மற்றும் தோல் சம்பந்தமான வியாதிகள் குறித்து ஆய்வுகள் வைத்திய அதிகாரிகளால்மேற் கொள்ளப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டது.

இந்த ஆய்வில் தொழுநோய் அறிகுறிகள் இப்பகுதிகளில் மிகக் குறைவாகவுள்ளதெனவும் மற்றைய தொகுதியினருக்கான ஆய்வு வேறு தினங்களில் விரைவில் நடாத்தப்படவுள்ளதென்றும் வைத்திய அதிகாரி தெரிவித்தார்.

கண் மற்றும் பல் வியாதிகளுக்கும் அங்கு வந்தவர்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு மருந்துகள் வழங்கப்பட்டன. 01

## தொழிலாளர் பெரும் பாதிப்பு

பொன்னாலை, மூளாய்ப் பகுதியை நோக்கி காரைநகர் இராணுவத்தினரால் ஷெல் தாக்குதல் மேற்கொள்ளப்படுவதால் பொன்னாலை பகுதிக் கடலில் கடற்தொழில் செய்ய முடியாது கடற்தொழிலாளர்கள் பெரும் கஷ்டமடைந்து வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. 18

# தடைசெய்யப்பட்ட பொருள்களில்

## மருந்துவகை இனிப்பு வகையும் அடங்கும்

வடக்கிற்கு கொண்டு செல்லத் தடை விதிக்கப்பட்ட 48 பொருள்களின் விவரங்களும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளரினால் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ளதாக ஏஜென்ஸிச் செய்திகள் தெரிவித்தன.

எனினும் இதற்கான அனுமதிப்பத்திரங்களை இன்று முதல் புனர்வாழ்வு அமைச்சு வழங்கவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

தடை விதிக்கப்பட்ட பொருள்களில் மருந்து வகை மதுசாரம், தங்கம் சீமெந்து, கற்பூரம், வெற்றுச் சாக்கு, மோட்டார் சைக்கிள், சவர்க்காரம், இனிப்பு வகைகள் என்பன முக்கியமானவையாக அமையும் என அச் செய்தி மேலும் தெரிவித்தது.

இப் பொருள்களை கொண்டுசெல்வதாயின் புனர்வாழ்வு அமைச்சிடம் அனுமதி பெற்ற பின்பே கொண்டு செல்ல வேண்டும் என அச் செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சாவகச்சேரியில் தொலைக்கல்வி வகுப்பு ஆரம்பம்

தென்மராட்சி கல்விகோட்டத்தில்பயிலுநர் ஆசிரியர்களுக்கான தொலைக்கல்விப்பயிற்சி நெறி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதில் 93 பயிலுநர் ஆசிரியர்கள் பயிற்சி பெறுகின்றனர். தற்போது சனி, ஞாயிறு நாட்களில் மட்டும் சா / மகளிர் மகா வித்தியாலயத்தில் நடை பெற்று வருகின்றது. இவர்களுக்கான விரிவுரையை திரு என். இராசசேகரம், திருமதி கைலைநாதன் ஆகியோர் நடாத்தி வருகின்றனர். தென்மராட்சி தொலைக் கல்வி ஆசிரிய மாணவத் தலைவராக திரு என். ஆர். மகேந்திரன் தெரிவு செய்யப்பட்டுள்ளார். ப 29

## 4307 மீற்றர் உயர மலையில் ஏறி 7 வயதுச் சிறுவன் சாதனை

உயர்ந்த மலைகளின் சிகரங்களைப் பெரியவர்கள் அடைந்து சாதனை புரிவது போல ஏழுவயதுச் சிறுவன் ஒருவன் 4307 மீற்றர் உயர மலையின் சிகரத்தை அடைந்து சாதனைபுரிந்திருக்கிறான்

சுவிற்சர்லாண்டில் உள்ள 7வயதுச் சிறுவன் ஒருவனே. ஐரோப்பாவின் மிக உயர்ந்த மலையான மவுண்ட் பிளாங்கில் வெற்றிகரமாக ஏறிச் சாதனை புரிந்திருக்கிறான்.

## முல்லைத்தீவு மாவட்டத்தில் உணவு விநியோகம் பாதிப்பு

முல்லைத்தீவு மாவட்டத்தில் ஒரு மாதத்திற்கு மேலாக தொடர்ந்தும் ஊரடங்குச் சட்டம் அமுலில் இருந்து வருவதால் உணவு விநியோகம் பாதிப்படைந்துள்ளது.

உணவுக் களஞ்சியம் வெறிச் சோடியதையடுத்து உணவுப் பொருள்களை முறையாக வழங்க முடியா திருப்பதோடு உணவுக் களஞ்சியமும் காலியாகி உள்ளது.

இம் மாவட்டத்திற்கான உணவுப்பொருள்கள் தரை மார்க்கமாக எடுத்து வருவதற்கு தயாராக இருந்தும் ஊரடங்கால் உணவு லொறிகள் வந்து சேர முடியாதிருப்பதாகவும் செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

இதே வேளை இம் மாவட்டில் முகாமிலுள்ள அகதிகளைத் தவிர்ந்தோருக்கு உலர் உணவு நிறுத்தப்பட்டதையடுத்து சிறுவர்கள் உட்பட பல்லாயிரக் கணக்கானோர் பட்டினியால் வாடுகின்றனர். (08)


### சிறு விளம்பரம்

**தேவை**

பார்மஸி அனுபவமுள்ள பெண் ஊழியர் தேவை. உடன் தொடர்பு கொள்ளவும். நாதன் ஆங்கில மருந்துச்சாலை நல்லூர் மார்க்கட், கல்வியங்காடு, யாழ்ப்பாணம். 08061

**வைத்தியம்**

சகல விதமானநாட்பட்ட நோய்களுக்கும் ஹோமியோபதிவைத்தியசிகிச்சை நிரந்தர நிவாரணம்அளிக்கிறது. டாக்டர். எம். வி. தில்லைசந்திரன், சென். செபஸ்தியன் வீதி, பாஷையூர் (புனித அந்தோனியார் கோவில் முன்பாக, யாழ்ப்பாணம். 08053


## கருத்தரங்கு

''பலாலி ஆசிரிய கலாசாலையில் எதிர்வரும் திங்கள், செவ்வாய், புதன்கிழமைகளில் (12, 13, 14 - ஆவணி) காலை 8. 30 முதல் மாலை 5. 30 வரை நாடகக் கருத்தரங்கும் களப்பயிற்சியும் நடைபெறும் என்றும் முன்னர் பெயர்களைப் பதிவு செய்தவர்கள் தவறாது பங்கு கொள்ளுமாறும் அதிபர் அறிவித்துள்ளார்.

## குண்டுவெடிப்பு சந்தேக நபர்கள் தொடர்ந்தும் தடுத்துவைப்பு

கொழும்பு குண்டுவெடிப்பு தொடர்பாக தடுத்துவைக்கப்பட்டுள்ளவர்கள் தொடர்ந்தும் விசாரணை செய்யப்பட்டு வருகின்றனர்.

இவர்களை விடுவிக்க உறவினர்கள் எடுத்த முயற்சிகள் பயனளிக்க வில்லையெனவும் கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் இவர்கள் மீது வழக்குத்தாக்கல் செய்யப்படவுள்ளதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இவர்களை சர்வதேச செஞ்சிலுவைச்சங்கம் அண்மையில் சென்று பார்வையிட்டது. (06)

விபுலாநந்தர் நூற்றாண்டு:

# விபுலாநந்தர் கவிமலர்கள்

விபுலாநந்த அடிகள் கவிஞராகவும், அறிஞராகவும், ஆராய்ச்சியாளராகவும் பத்திரிகை ஆசிரியராகவும் திகழ்ந்து தமிழை அழகுற வளர்த்தவர். அவரது சொந்தக் கவிதைகள் போலவே அவரது மொழிபெயர்ப்புக் கவிதைகளும் இலக்கிய இன்பம் மிக்கவை. அவரது நூற்றாண்டு தொடர்பாக, கற்பனை வளம், இலகுநடை, கருத்தாழம், தமிழ் அழகு அனைத்தும் நிரம்பிய அவரது கவிமலர்களுள் சில இங்கு இடம் பெறுகின்றன.

## சேக்ஷ்ஸ்பியரின் யூலியசீசர்
## நாடக மொழிபெயர்ப்பில் இரு மலர்கள்

அஞ்சினர்க்குச் சதமரண மஞ்சாத நெஞ்சத்
தாடவனுக் கொருமரண மவனிமிசைப் பிறந்தோர்
துஞ்சுவரென் றறிந்திருந்தும் சாதலுக்கு நடுங்குந்
துன்மதியுட ரைக்கண்டாற் புன்னகைசெய் பவன்யான்

இன்னலும்யா னும்பிறந்த தொருதினத்தி லறிவாய்
இளஞ்சிங்கக் குருளைகள்யாம் யான்மூத்தோ னெனது
பின்வருவ தின்னலெனப் பகைமன்ன ரறிவார்
பேதுறல்பெண் ணணங்கேயான் போய்வருதல் வேண்டும்

## கங்கையில் விடுத்த ஓலை
## கவிதையிலிருந்து மூன்று மலர்கள்

எழுத்தறிந்து கலைபயின்றோ வின்றமிழி னியநூல்
எத்தனையோ வத்தனையு மெண்ணியாழங் கண்டோன்
பழுத்ததமிழ்ப் புலமையினோர் பேரவையில் முந்தும்
பணிந்தமொழிப் பெரும்புலவன் கனிந்தகுண நலத்தான்;

சொல்வகையுஞ் சொற்றொகையுஞ் சொல்நடையு முணர்ந்தோன்
சொலல்வல்லான் சொற்சோராத் தூயநெறி யாளன்
பல்வகைய நூற்கடலுட் படிந்துண்மை மணிகள்
பலவெடுத்துத் திரட்டிவைத்த பண்டாரம் போல்வான்

மொழித்திறத்தின் முட்டறுத்து முதனூ லுணர்ந் தோன்
மொழிவதற மொழியென்னும் மூதுரையுந் தெளிந் தோன்
அழுக்கறுத்த தூயசிந்தை அந்தண்மை யடக்கம்
அணியிவைதா மெனக்கொண்டோ னறநெறியில் நின் றோன்

## ஈசனுவக்கும் மலர்

வெள்ளைநிற மல்லிகையோ வேறெந்த மாமலரோ
வள்ள லடியிணைக்கு வாய்த்த மலரெதுவோ
வெள்ளை நிறப் பூவுமல்ல வேறெந்த மலருமல்ல
உள்ளக் கமலமடி உத்தமனார் வேண்டுவது.

காப்பவிழ்ந்த தாமரையோ கழுநீர் மலர்த்தொடையோ
மாப்பிளையாய் வந்தவர்க்கு வாய்த்த மலரெதுவோ?
காப்பவிழ்ந்த மலருமல்ல கழுநீர்த் தொடையுமல்ல
கூப்பியகைக் காந்தளடி கோமகனார் வேண்டுவது

பட்டளிசேர் பொற்கொன்றையோ பாரிலிலாக் கற் பகமோ
வாட்ட முறாதவர்க்கு வாய்த்த மலரெதுவோ?
பாட்டளிசேர் கொன்றையல்ல பாரிலிலாப் பூவுமல்ல
நாட்டவிழி நெய்தலடி நாயகனார் வேண்டுவது

# ஈழத்தமிழர் வரலாறு கற்பிக்கப்பட வேண்டும்

''எமது வரலாறுகள் பாடசாலைப் புத்தகங்களில் திரிபுபடுத்தப்பட்டுள்ளன. தமிழர்களின் வீரஉணர்வுகள் இவற்றில் பிரதிபலிக்கவில்லை மாறாகச் சிங்களவரின் கலை, கலாசாரமும் வரலாறுகளுமே இப்புத்தகங்களில் காணப்படுகின்றன அரசாங்கத்தின் பாடத்திட்டத்தின் மூலம் அவை எமது மாணவர்கள் மீது திணிக்கப்படுகின்றன. ஆசிரியர்கள் ஈழத் தமிழர்களின் வரலாறுகளை மாணவர்களுக்குக் கற்பிக்கவேண்டும். பாடத்திட்டத்திற்குப் பிறிதாக இப்பணியினைச் செய்வதன் மூலம் மாணவர்கள் எம் முன்னோர் பற்றி அறிவதுடன் எம்து தேசியத்தையும் ஊட்டப்பட்டவர்களாவார்கள்''

இவ்வாறு மானிப்பாய் கொத்தணி ஆசிரியர்களுக்கு நடைபெற்ற கருத்தரங்கில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் தமிழீழத் தேசிய ஆசிரியர் ஒன்றியப் பிரமுகர் எஸ். அருணாசலம் குறிப்பிட்டார்.

மேலும் அவர், ''எமது மண்ணில் எத்தனையோ வீர வரலாறுகள் படைக்கப்பட்டுள்ளன. இவற்றினை மாணவர்களுக்கு நாம் எடுத்துக் கூற வேண்டும் அவர்கள் வீரமிக்கவர்களாக உருவாக்கப்பட வேண்டும். ஸ்ரீலங்கா இராணுவத்துடனும், தேசவிரோதக் கும்பல்களுடனும் மோதிய நம் வீரர்கள் படைத்த காவியங்கள் எவ்வளவோ உண்டு'' என்றார்.

கொத்தணி அதிபர் திரு. செ. கேசவராஜன் தலைமையில் மானிப்பாய் இந்துக் கல்லூரி மண்டபத்தில் இக்கருத்தரங்கு நடைபெற்றது. (30)

## ஈராக்கின் எண்ணெய் விற்பனைக்கு
## ஐ. நா. பாதுகாப்புச் சபை அனுமதி

ஈராக், வரும் 6 மாத காலத்திற்குள் 5000 கோடி ரூபாவிற்கு பெற்றோல் மற்றும் டீசல் என்பவற்றை விற்பனை செய்யலாம் என ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச்சபை தீர்மானமொன்றை நிறைவேற்றியுள்ளது.

இப்பணம் உணவு மற்றும் மருந்து வகைகளை கொள்வனவு செய்யவும், நஷ்டஈடு வழங்கவும் மட்டுமே செலவிட வேண்டுமெனவும் வலியுறுத்தியுள்ளது. இந்த நிபந்தனையை ஈராக் ஏற்க மறுத்துள்ளது. நிபந்தனைகள் அற்ற நிலையில் மட்டுமே தன்னால் எண்ணெய் விற்பனை செய்ய முடியும் என அது கூறியுள்ளது.

# இந்திரா காங்கிரஸ் அ.தி.மு.க.
## இடையே பிளவு ஏற்படுத்த முயற்சி

இந்திரா காங்கிரஸுக்கும் அ. தி. மு. கவுக்கும் இடையில் உள்ள உறவில் பிளவை ஏற்படுத்த சிலர் முயல்வதாக முன்னாள் அமைச்சர் வாழப்பாடிராமமூர்த்திதெரிவித்தார்

இந்த இரு கட்சிகளின் உறவில் எதுவித கருத்து வேறுபாடுகளும் இல்லை எனவும் அவர் மேலும் சொன்னார்.

காவிரிநீர் பிரச்சினையை காரணம் காட்டி சில பத்திரிகைகள் இதற்கு முயல்வதாகவும் அவர் குறிப்பிட்டார்.

# “காலத்தின் கடமையிலிருந்து நாம் என்றும் விடுபடக்கூடாது”

''இன்று தமிழ் மக்களை அழிக்க இலங்கை இராணுவம் முழு முயற்சியையும் மேற்கொண்டுள்ளது. ஆனையிறவுப் பிராந்தியத்தில் பல பாரிய ஆயுதங்களையும் பயன்படுத்துகிறது. அத்தோடு சுமார் 10 ஆயிரம் இராணுவத்தையும் இறக்கியுள்ளது. பத்தாயிரம் இராணுவம் என்ன, சிங்களவர்கள் முழுமையாக ஆயுதம் ஏந்தி வந்தாலும் புலிகள் சளைக்க மாட்டார்கள்.''

இவ்வாறு விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியைச் சேர்ந்த திரு அரவிந்தன் வரணி நாவற்காட்டில் நடைபெற்ற போர்க்காலக் கருத்தரங்கில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் தெரிவித்தார்.

திரு. சி சிவபாலன் தலைமையில் நடைபெற்ற இக் கருத்தரங்கில் திரு. அரவிந்தன் தொடர்ந்து பேசுகையில் காலத்தின் வரலாற்றுக் கடமையிலிருந்து நாம் விடுபடக்கூடாது. வெட்ட வெளியிலே இன்று எமது இளைஞர்கள் உயிரைத் தியாகம் செய்து நேருக்குநேர் நின்று மோதுகின்ற இவ் வேளையில் 40, 45,50, வயதுள்ள பலர் போராட்டத்தில் இணைந்து கொண்டிருக்கிறார்கள், ஆனால் போராடக்கூடிய ஆரோக்கியமான இளைஞர்கள், யுவதிகள் எல்லாம் போராட்டத்திலிருந்து அந்நியப்பட்டு வருகிறார்கள்.

அவரைத் தொடர்ந்து தென்மராட்சி விடுதலைப்புலிகள் கலைபண்பாட்டுக் கழகத்தைச் சேர்ந்த க. சந்திரசேகரம் பேசுகையில் அன்பு தான் இன்ப ஊற்று, அன்பு தான் உலக ஜோதி, அன்பு தான் உகைமகா சக்தி என்று போதித்த புத்தரின் வழிவந்த பிக்குமார் தர்மம், அன்பு, பாசம் பற்றிப் பேசவேண்டியவர்கள் இன்று போராட்டம் பற்றி பேசி எமது பாரம்பரிய மண்ணை ஆக்கிரமிப்பதற்காக ஆயிரக்கணக்கில் ஆள் சேர்த்து வருகிறார்கள். இதே வேளையில் எமது பாரம்பரிய பிரதேசமான எமது சொந்த மண்ணை மீட்கும் பணியில் எமது இளைஞர்கள், யுவதிகள் ஈடுபடாமல் இன்னும் தூங்கிய நிலையில் அந்நியப் பட்டிருக்கலாமா? ஆகையால் இளைஞர்களே, யுவதிகளே, மாணவர்களே நீங்கள் தூங்கியது போதும் துடித்தெழுங்கள், என அறைகூவல் விடுத்தார். (42)

# ராஜீவ் கொலைவழக்கு
## சி. பி. ஐ. அதிகாரிகள் குழப்பம்

ராஜீவ் கொலைவழக்கு விசாரணைகளை மேற்கொண்டுவரும் சி. பி. ஐ. அதிகாரிகள் குழப்பத்திற்குள்ளாவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுவரை கைது செய்யப்பட்டுள்ள நளினி, முருகன், டேவிட் பையாஸ், ராஜா ஆகிய நால்வரிடமிருந்தும் எந்தவிதமான உருப்படியான தகவல்களையும் பெறமுடியவில்லை எனத் தமிழகப் பத்திரிகையொன்று தெரிவித்து உள்ளது.

இதனால் சரியான தகவல்களின்றி முடிவெதனையும் காணமுடியாத நிலையில் சி. பி. ஐ. அதிகாரிகள் உள்ளனர்.

சிவராஜனைக் கைதுசெய்தால்தான் முழுமையான விவரங்களையும் பெறமுடியும் என ஒரு அதிகாரி தெரிவித்ததாகவும் அப்பத்திரிகை கூறியுள்ளது (05)

# மலையகத்தில் கால அவகாசத்துடன் ஆசிரிய நியமனங்கள்

மலையகத்தில் கணிதம் தவிர்ந்த ஏனைய பாடங்களில் திறமையாகச் சித்தியடைந்து வேலையற்றிருக்கும் படித்த இளைஞர் யுவதிகளுக்குக் கணித பாடத்தில் சித்தியடைவதற்கான கால அவகாசத்தோடு ஆசிரிய நியமனங்கள் வழங்கப்படும்.

மலையக வித்தியாலயங்களில் பரவலாக ஏற்பட்டிருக்கும் வெற்றிடங்களை மலையக இளைஞர் யுவதிகளைக் கொண்டே நிரப்பப்படவுள்ளது. அவற்றுக்கான நியமனங்களில் கணித, விஞ்ஞான பாடங்களில் சித்தியடையத் தவறியவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். (08)

## புதிய அலுவலகம்

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கக் கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்கிளையின் புதிய அலுவலகத் திறப்பு விழா எதிர்வரும் வெள்ளிக்கிழமை திறந்து வைக்கப்படவுள்ளது.

இவ் அலுவலகம் கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்துக்கு முன்னால் உள்ள கட்டிடத்தில் அமையவிருக்கிறது. (06)

# சம்பள மீளாய்வின்போது
## ஒய்வூதிய மீளாய்வும் வேண்டும்

சம்பளங்கள்மீளாய்வு செய்யப்படும்போது ஓய்வூதியமும் மீளாய்வு செய்ய வேண்டும் எனக் கோருவதாக நேற்று முன்தினம் வை.எம்.சி.ஏ மண்டபத்தில் நடைபெற்ற யாழ் மாவட்ட ஒய்வூதியர் சங்கக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

இக் கூட்டத்தில் யாழ் மாவட்டத்தில் உள்ள ஓய்வூதியர்கள் தமது ஓய்வூதியத்தைப் பெறுவதில் உள்ள நடைமுறைச் சிக்கல் பற்றியும் வவுச்சரோடு இரவப் பணத்தையும் சேர்த்து அனுப்பி, வங்கி அதனை வேறு தேவைகளுக்குப் பாவிக்காமல் இருக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும், வாழ்க்கைச் செலவுப்படியாக வழங்க இருக்கும் 260/- ஐ வடக்குக் கிழக்கில் உள்ள தற்போதைய சூழ்நிலையைக் கருத்திற்கொண்டு இங்குள்ளவர்களுக்கு முதலில் வழங்க வேண்டும் என்ற கோரிக்கைகள் அடங்கிய மகஜர் ஒன்றை ஜனாதிபதிக்கு அனுப்புவது எனவும் முடிவெடுக்கப் பட்டது.

ஒவ்வொரு மாதமும் குறித்த தவணைக்குள் செலுத்தத் தவறும் ஒய்வூதியங்களுக்கு அவை பின்னர் வட்டியுடன் சேர்த்துச் செலுத்த வேண்டும் என அரச அதிபரைக் கோருவதாகவும் தீர்மானிக்கப்பட்டது (04)

## கொடுப்பனவு

பலாலி ஆசிரிய கலாசாலையில் 1989 ஆம் ஆண்டு இரண்டாம் வருடப் பயிற்சி ஆசிரியராக இருந்தவர்களுக்குரிய ஆபத்துக் கொடுப்பனவை இதுவரை பெறாதோர் அதற்குரிய ஆவணங்களுடன் உடனடியாகக் கலாசாலை அதிபருடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்படுகின்றனர்.

# சுவீடன்விஞ்ஞானிகள்கண்டுபிடித்த மொழிபெயர்ப்புக் கருவி

ஆங்கிலம், பிரெஞ்சு, ஸ்பானிஷ், ஜெர்மன், சுவீடிஸ், ஆகிய ஐந்து மொழிகளில் மொழிபெயர்த்துத் தரும் கையடக்கமான, டிரான்ஸிலேட்டர் கருவி ஒன்றினை சுவீடனில் உள்ள விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர்.

இதில் 7000, சாதாரணமாகபாவிக்கக் கூடிய அத்தியாவசிய வார்த்தைகள் உள்ளன. உதாரணமாக நன்றி என்று கூறுவதை ஆங்கிலத்தில் தாங்ஸ் (THANKS) என்கிறோம். இதை சுவீடிஸ் மொழியில் பெற வேண்டுமானால், முதலில் தாங் (THANK) என்று அமைத்து விட்டு சுவிடிஸ் பொத்தானை அழுக்கினால் போதும் நன்றி என்ற சொல்லுக்கு ஸ்வீடிஸில் இணையான தக (TACH) என்ற சொல்லு மின்னும். இந்த டிரான்ஸ் லேட்டர் கருவி உல்லாசப் பயணிகட்கு ஒரு வரப்பிரசாதம் என்று கூறப்படுகின்றது.

130 கிராம் மாத்திரம் எடையுள்ள இந்த ''டிரான்ஸ் லேட்டர்'' கருவியை கோட்டின்உட்பக்கத்திலோ சேட் பொக்கற்றிலோ வைத்துக் கொள்ளலாம்.

இச் சாதனத்தின் விலையும் மிக மலிவாக இருபதினால் (இலங்கை நாணய மதிப்பின்படி ரூபாய் 2160) ஐரோப்பிய, அமெரிக்கச் சந்தைகளில் இதன் விற்பனை மிகச் சுறுசுறுப்பாக இருக்கிறதாம். 16

# போர்க்காலக் கருத்தரங்கு

தமிழீழத்தில் பரவலாகப் போர்க்காலக் கருத்தரங்குகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. யாழ் மாவட்டத்தில் இன்று இரவு 8.00 மணிக்கு வலிகாமத்தில் உடுவில் தெற்கு சுன்னாகம் ஐயனார் கோயிலடியிலும் சங்கானை பனிப்புலம் அம்மன் கோயிலடியிலும்,

தீவகத்தில் வேலணை ஊரதீவு புங்குடுதீவு திருநாவுக்கரசு வித்தியாலயத்திலும் வேலணை பெருங்காடு புங்குடுதீவு றோமன் கத்தோலிக்க வித்தியாலயத்திலும்,

வடமராட்சியில் கரவெட்டி துன்னாலை கலிகைச் சந்தியிலும் பருத்தித்துறை புலோலி தெற்கு உபயகதிர் காமத்திலும்,

தென்மராட்சியில் சாவகச்சேரி சங்கத்தானை பஞ்சாபிகர் வீட்டிலும் கொடிகாமம் கச்சாய் பாடசாலையிலும் நடைபெறவுள்ளது என விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி மக்கள் உறவு கொள்கை முன்னெடுப்புப்பிரிவின் தலைமைச் செயலகம் அறிவித்துள்ளது.

## மத்திய அமைச்சர்களுக்கான

# பகிஷ்கரிப்பைக் கைவிடுமாறு வாழப்பாடி கோரிக்கை

மத்திய அமைச்சர்களாக ப. சிதம்பரம், அருணாசலம் ஆகியோர்களைப் பகிஷ்கரிப்பது எனத் தமிழக ஆளும் அ. தி. மு. க எடுத்த முடிவை கைவிடுமாறு வாழப்பாடி ராமமூர்த்தி தமிழக அரசைக் கேட்டுள்ளார்.

காவிரி நீர் பங்கீடு தொடர்பாக எழுந்த தமிழகம் - கர்நாடகம் சர்ச்சையில் சிதம்பரமும், அருணாசலமும் தமிழகத்திற்கு எதிரான நிலையில் கொள்கைகளைக் கொண்டிருந்தனர் எனவும், இவர்கள் தமிழகத்தில் கலந்துகொள்ளும் கூட்டங்களைப் பகிஷ்கரிப்பது எனவும் அ. தி. மு. க. முடிவெடுத்துள்ளமை தெரிந்ததே

காவிரி நீர் தொடர்பாகவே தாம் ராஜினாமாச்செய்ததாகவும் வாழப்பாடி ராமமூர்த்தி நேற்றுச் சென்னையில் விடுத்த அறிக்கை ஒன்றில் சுட்டிக்காட்டியுள்ளார்.

முன்னதாக அ. தி. மு க.- காங்கிரஸ் கூட்டை உடைக்க சில சக்திகள் முயல்வதாக அவர் கூறியிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

# காரைநகரிலிருந்து தினமும் ஷெல் தாக்குதல்

காரைநகர் - வலந்தலைப் பகுதியில் நிலைகொண்டிருக்கும் படையினர் இப்போது தினமும் காலை, இரவு நேரங்களில் ஷெல் தாக்குதல்களை நடாத்தி வருகின்றனர்.

பொன்னாலை, மூளாய், திருவடிநிலை ஆகிய பகுதிகளை நோக்கியே படையினர் ஷெல் தாக்குதல்களை மேற்கொள்கின்றனர். நேற்றுமுன்தினம் இரவும் குறிப்பிட்ட பகுதிகளை நோக்கி ஐந்துக்கு மேற்பட்ட ஷெல்கள் ஏவப்பட்டன. (07)

# செய்கை பண்ணாத காணி உற்பத்திக் குழுக்களிடம்

வடமராட்சி கிழக்கில் காலபோக நெற்செய்கையில் ஈடுபடாத விவசாயிகள் தமது வயல்களை ஒப்பந்த அடிப்படையில் உற்பத்திக் குழுக்களிடம் கையளிக்க வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

காலபோக நெற் செய்கையில் ஈடுபடவுள்ள விவசாயிகள் தற்போது பெய்துள்ள மழையினையடுத்து வயல் நிலங்களை பண்படுத்துமாறு உற்பத்திக் குழுக்களால் கேட்கப்பட்டுள்ளனர். 10

## சாரணர் கூட்டம்

வடமாகாணத்தைச்சேர்ந்த சிரேஷ்ட சாரணர்கள், திரிசாரணர்கள் அனைவரையும் இன்று மாலை 4.00 மணிக்கு யாழ் மத்திய கல்லூரியில் கூடுமாறு சாரணர் சேவைப் பொறுப்பாளர் கேட்டுள்ளார்.

## பிரசவ...

வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது

பிரசவப் பெண்களை ஆஸ்பத்திரியில் அனுமதித்துவிட்டு இந்த ஊசி மருந்துக்கு ஓட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது

மலேரியாநோய்க்குரியமருந்தும் முடிவடைந்துள்ளது. 24

நோய் நாடி நோயின் குணம் நாடி
வாய் நாடி வாடி ஓடித் தேடி வரும்
வாடிக்கையாளர்களுக்கு ஓர் நற்செய்தி !

12. 08. 91 இன்று காலை சுபவேளை 10. 45 மணிக்கு

"மங்களகரமான ஆரம்பம்"

யூனிவேர்சல் மருந்தகம்
(UNIVERSAL PHARMACY)
இல. 770, பருத்தித்துறை வீதி,
முத்திரைச்சந்தை,
நல்லூர்.

எங்களிடம்
சகல விதமான, தரமான ஆங்கில மருந்து வகைகளை நிதான விலையில் பெற்றுக் கொள்ளலாம்.

வாடிக்கையாளரின் திருப்தியே எங்கள் - திருப்தி
08062

இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷேர்ஸ் (பிறைவேற்) லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ் கல்வியங்காடு டச்சுவீதி 'லக்ஷ்மி பில்டிங்'இல் உள்ளஅச்சகத்தில் 12.08.91 இல்அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

★ சகல பொது ஸ்தாபனங்களுக்கு முன்பாக

# உலர் உணவு நிவாரண நிறுத்தம்; கண்டித்துமறியல்போராட்ட முஸ்தீபு

உலர் உணவு நிவாரணம் அரசினால் நிறுத்தப்பட்டதைக் கண்டித்து யாழ் செயலகத்தின் முன்பாக மாபெரும் மறியல் போராட்டம் எதிர்வரும் 16 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இதற்கு முன்னோடியாக இன்று யாழ் செயலகத்தில் உதவி அரசாங்க அதிபர்களுக்கான மாநாட்டில் இரு மகஜர்கள் சமர்ப்பிக்கப்படவுள்ளன. நாட்டில் சுமுக நிலை தோன்றும்வரை இதுவரை காலமும் வழங்கப்படாமல் இருக்கின்ற உலர் உணவு நிவாரணம் உடன் வழங்கப்படல் வேண்டும்.

சகல மக்களும் ஒரு நிரந்தரவேலைவாய்ப்பினை பெறும் வரை தொடர்ந்து நிவாரணம் வழங்கப்படவேண்டும் ஆகிய கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன.

யாழ் கொக்குவில் இந்துக் கல்லூரியில் வலி - வடக்கு புனர் வாழ்வுக் கழகத் தலைவர் சி சிவமகாராசா தலைமையில் நடைபெற்ற மேற்படி கலந்துரையாடலில் சகல பொதுஸ்தாபனங்கள் அமைப்புக்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

இம் மறியல் போராட்டத்தை அரசுசெவிசாய்க்காத பட்சத்தில் போராட்டங்கள் ஒவ்வொரு பொதுஸ்தாபனங்களுக்கு முன்பாக தொடர்ந்து நடாத்தப்படும் எனவும் தீர்மானிக்கப்பட்டது.

இப்போராட்டம் வலுவடைய யாழ் மாவட்டத்திலுள்ள சகல பொதுமக்களும் இணைந்து அரசுக்குஎதிராகப் போராடுமாறும் இக் கூட்டத்தில் கோரப்பட்டது. 04,27

## மீசாலையில்...

கொண்ட போராளியான "ஜெனா"வின் (சிறீதங்கராசா - நவநீதன், மீசாலை வடக்கு) புகழுடல் மக்கள் அஞ்சலிக்காக மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலய மண்டபத்தில் வைக்கப்பட்டு அங்கு அஞ்சலிக் கூட்டமும் இடம்பெற்றது

அஞ்சலிக் கூட்டம் முடிவுற்றதும் இந்த மாவீரனின் புகழுடல் பாண்ட் வாத்தியம் முழங்க கொடிகாமம் மாவீரர் மயானம் வரை ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டு அங்கே தியுடன் சங்கமமாக்கப்பட்டது. 42

## சிநோரை...

நிலையத்தின் தலைவர் திரு. ஜெயமன்னே இந்த நிலையம் ஆரம்பிக்கப்பட்ட போது யாழ்ப்பாணத்தைச் சார்ந்த கடற்றொழிலாளர்களுக்கு மட்டும் சேவை செய்வதற்கென்ற குறிக்கோளுடனேயே ஆரம்பிக்க பட்டது. ஆனால் இந்த ஸ்தாபனத்தின் சேவை இன்று இலங்கையிலுள்ள அனைத்துக் கடற்றொழிலாளர்களுக்கும் அவசியம் என்று அவர் தெரிவித்தார்.

கருத்தரங்கில் சமுகமளித்திருந்த தொழிற்சங்கப் பிரதிநிதிகள் இந்த ஸ்தாபனத்தை இயங்கச் செய்வதற்கு மின்சாரமும், மூலப்பொருள்களும் விநியோகிக்கும்படி கேட்ட போது அது சாந்தியமற்றது என அவர் கூறினார் (03)

## முப்படைகளை...

பன தமது செய்தியறிக்கைகளில் நேற்று முன்தினம் முக்கியத்துவம் கொடுத்து ஒலி ஒளி பரப்பின.

படையினர் உற்சாகமாக உள்ளதாகவும், இராணுவம், விமானப்படை கடற்படை ஆகியோரிடையே நல்ல ஒற்றுமையும் கூட்டுறவும் உள்ளதாகவும் படைகள் சோர்ந்து விடாமல் இன்னமும் தொடர்ந்து புலிகளுடன் போரிட்டு வருகின்றனர் எனவும் டென்சில் கொப்பேகடுவ தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்

மேஜர்ஜெனரல் கொப்பேகடுவவின் இவ்வறிக்கை, புலிகளின் தாக்குதலினால் படையினரின் மனோ நிலை தற்போது மாறியிருப்பதையும் அவர்கள் சோர்வடைந்துள்ளதையும் எடுத்துக் காட்டுவதாக அவதானிகள் சுட்டிக் காட்டுகின்றனர்.

## பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி

# அகதிகளுக்கு நிவாரணம் நிறுத்தப்பட்டதாக அறிவிப்பு

பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரியில் அகதிகளாக இருந்த வலிகாமம் வடக்குப் பகுதி மக்களுக்கு இனிமேல் நிவாரணம் வழங்கப்பட மாட்டாதென அறிவிக்கப்பட்டுள்ளது.

முகாம்களில் இல்லாதவர்களுக்கு நிவாரணம் நிறுத்தப்பட்டுள்ளதாக அரசு அறிவித்திருந்தது.

வலிவடக்கில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கையால் இவர்கள் இடம்பெயர்ந்து பண்டத்தரிப்பு இந்துக்கல்லூரியில் தங்கியிருந்தனர்.

கல்லூரியில் வகுப்புக்கள் நடைபெறுவதால் 'இவர்கள் இந்திய இராணுவம் இருந்த வீடுகளில் தங்கவைக்கப்பட்டனர்.

இவர்களுக்கு தொண்டர் நிறுவனங்களும் பண்டத்தரிப்பு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கமும் ஆரம்பத்தில் பல்வேறு உதவிகளைச் செய்தது

இவர்கள் தற்போது தங்கியுள்ள வீடுகள் முகாம் இல்லையென தெரிவிக்கப்பட்டு தற்போது அரசின் உலர் உணவு நிவாரணம் நிறுத்தப்பட்டுள்ளது. 06

## குருநகரில் ஆஞ்சநேயர்

# இராணுவ தொகைக்கேற்ப எம்பலத்தை அதிகரிக்க வேண்டும்

"முன்னர் மறைந்திருந்து படையினரை தாக்கியதினால் பல இராணுவத்தினரை தாக்க ஒரு சில போராளிகளே போதும். ஆனால் தற்போது நடைபெறும் நேரடி யுத்தத்தில் இராணுவத் தொகைக்கேற்ப எமது தரப்புத் தொகையும் அதிகரிக்க வேண்டும்" என குருநகர் தொடர்மாடியில் நேற்று முன்தினம் நடைபெற்ற போர்க்காலக் கருத்தரங்கில் யாழ் மாவட்ட விடுதலைப்புலிகள் கொள்கை முன்னெடுப்புப் பொறுப்பாளர் ஆஞ்சநேயர் கூறினார்.

கரந்தடிப்படையாக இருந்த தமிழீழ விடுதலைப் புலிகள் தற்போது மரபு வழிப்படையாக மாறி இராணுவத் தளங்களையும், முகாம்களையும் அழிக்கும் படையாக மாறிவிட்டது என்றார்.

ஆனையிறவுப் போரில் வெற்றிப்பாதையை திருப்ப வீட்டுக்கொரு போராளி வர வேண்டும் என்றும் மேலும் அக் கருத்தரங்கில் கூறினார். 15

## அரேபிய...

ரிக்கடொலரைஅபிணையாகச் செலுத்த வேண்டும்.

இதன் பின்னரே இவர்கள் இலங்கைக்குச் செல்வதற்கான அனுமதி வழங்கப்படுமென தொழிலமைச்சு அறிவுறுத்தியுள்ளது.

## ஆனையிறவு

படையினருக்கு உதவியாக விமானப்படையினரும் தாக்குதல் நடாத்துவதாகவும் தெரிவிக்கப்பட்டது. இதனிடையே ஆனையிறவு முகாம் பகுதியில் நேற்று முன்தினமும் நடைபெற்றமோதலில் 3 படையினர் பலியானதாகவும் 32 படையினர் காயமடைந்ததாகவும் பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது. (07)

## இலங்கை

இனப்பிரச்சினையைத் தீர்க்கவே முன்னாள் ஜனாதிபதி இலங்கை-இந்திய உடன்படிக்கையைச் செய்துகொண்டார். இதன் விளைவாக இந்தியப் படைகளும் இலங்கையில் நுழைந்தன.

"இந்தியாவின் ஏற்பாட்டினால் மாகாணசபையும் உருவானது இதனால் ஜே. வி. பியினர்வன்முறையில் இறங்கி அரச சொத்துக்களை நாசமாக்கினர் எதிர்க்கட்சியினர் எனது கட்சிமீது வசைபாடினர் அந்நேரம் நாடே சீரழிந்திருந்தது" என்றார்.

தற்போது தமது அரசு எதிர்க்கட்சி எம். பியான மங்களமுனசிங்கவினால்சமர்ப்பிக்கப்பட்ட இனப்பிரச்சினைக்கான பாராளுமன்றத் தெரிவுக்குழு ஆலோசனையை ஏற்றுள்ளதாகவும் ஜனாதிபதி பிரேமதாஸ தெரிவித்தார்.

## உளவு...

மாடியபோது இத்தகைய நடவடிக்கைகளை அறிந்ததாக அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.

## 3 இந்திய ..

இதேவேளை ராஜீவ்காந்தி கொலை வழக்கில் முக்கிய சந்தேக நபரான சிவராஜனின் உறவினர்கள் மூவர் திருச்சியில் கைது செய்யப்பட்டுள்ளனர் இவர்களில் இருவர் பெண்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

## ஊரடங்கு

நகரம், முல்லையில் சில பகுதிகள் தவிர்ந்த ஏனைய இடங்களில் தொடர்ந்தும் ஊரடங்கு அமுலில் இருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## தமிழக

களை உபயோகிப்பது குறித்தும் பயிற்சியில் விபரிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது

தமிழகப் பொலிஸ் பிரிவிலுள்ள சப் இன்ஸ்பெக்டர்கள், ரிசேர்வ் இன்ஸ்பெக்டர்கள் அடங்கிய 40 பேர் கொண்ட குழுவிற்கு முதற்கட்டமாகப் பயிற்சி வழங்கப்படவுள்ளது.